செ.வெ.எண். 173 நாள் - 12.05.2021

# நீலகிரி மாவட்டம், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை செவிலியர் பயிற்சி பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் "உலக செவிலியர் நாளினை" போற்றும் வகையில், செவிலியர்களுடன் இணைந்து, கேக் வெட்டி அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

---

நீலகிரி மாவட்டம், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை செவிலியர் பயிற்சி பள்ளியில் இன்று (12.05.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் "உலக செவிலியர் நாளினை போற்றும் வகையில், செவிலியர்களுடன் இணைந்து, கேக் வெட்டி அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:--

"ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் என்பவர்தான் செவிலியர் சேவையின் முன்னோடி. தன்னலமற்று தொண்டாற்றிய அவரது பிறந்தநாளான மே 12-ஐ "சர்வதேச செவிலியர் தினமாக" நாம் கொண்டாடுகிறோம்.

நோயின் வலியிலும், வேதனையிலும் நாம் துடித்த தருணத்தில், மருத்துவமனைகளில் நம்மை அன்புடனும், பரிவுடனும் கவனித்துச் சேவையாற்றும் செவிலியர்களை கொண்டாடும் நாள் இது. மோசமான நோயோடு போராடி வரும் நோயாளிகளின் அருகில் சென்று அவர்களை கவனிக்கும் தாயுள்ளம் கொண்ட செவிலியர்கள், அதேநேரத்தில் அந்நோய்க்கு ஆளாகும் நிலையும் ஏற்படும். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தனது பணிகளை செவ்வெனே செய்யும் அனைத்து செவிலியர்களுக்கும் இந்நள்ளாலில் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் தற்போது ஏற்பட்டிருக்கும் இக்கட்டான காலகட்டமான கொரோனா நோய்த் தொற்று காலக்கட்டத்தில், தனது உயிரையும் துச்சமென மதித்து, களப்பணியாற்றி வரும் செவிலியர்கள், என்றென்றைக்கும் போற்றுதலுக்குரியவர்கள். அதிலும் பல செவிலியர்களுக்கு பணியின்போது கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்ட போதிலும் குணமடைந்தவுடன் மீண்டும் பணிக்கு திரும்பி சேவையாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு நன்றி செலுத்தும் விதமாக "செவிலியர் தினம்" இங்கு கொண்டாடப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தை பொறுத்தவரை நாளுக்கு நாள் கொரோனா நோய்த் தொற்று அதிகரித்து கொண்டிருக்கிறது. ஆனாலும் அதற்கேற்றார்போல் உட்கட்டமைப்பு வசதிகள் நீலகிரி மாவட்டத்தில் தயார் நிலையில் உள்ளது. கொரோனா பாதுகாப்பு மையங்களை பொறுத்தவரை இன்றும் கூட 3 கொரோனா பாதுகாப்பு மையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. கொரோனா பாதுகாப்பு மையங்களில் படுக்கைகள் அதிகளவில் தயார் நிலையில் உள்ளது. கொரோனா நோய் தொற்று ஏற்பட்டு கடுமையான உடல்நிலையில் உள்ளவர்களுக்கு மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் வசதியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 1.5 KLD கொள்ளளவு கொண்ட ஆக்ஸிஜன் வசதி உள்ளது. கூடுதலாக ரூ.45 இலட்சம் மதிப்பில், 6 KLD கொள்ளவும் கொண்ட திரவ ஆக்ஸிஜன் டேங்க் அமைக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

பொதுமக்கள் அனைவரும் கொரோனா நோய் தொற்று அறிகுறி இருந்தால், உடனடியாக தாமாக முன்வந்து பரிசோதனை எடுத்துக் கொள்ள வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் 13.05.2021 முதல் 18.05.2021 முதல் சுமார் 300 மேற்பட்ட தன்னார்வலர்களை பயன்படுத்தி தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளை சுற்றியுள்ள பொதுமக்களிடம் நேரடியாக சென்று ஏதேனும் அறிகுறி இருக்கிறதா என அறிந்து, அவ்வாறு இருப்பின் ஆரம்ப கட்ட நிலையில் அவர்களுக்கு சிகிச்சையளிக்க எளிதாக இருக்கும்.

நீலகிரி மாவட்டத்தில் இதுவரை 1.50 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தடுப்பூசி போட்டுக் கொண்டுள்ளார்கள். மீதமுள்ள பொதுமக்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். குறிப்பாக பழங்குடியின மக்கள் தடுப்பூசி எடுத்துக்கொள்வது தொடர்பாக தயக்கம் காட்டி வருவதாக தெரிகிறது. அதனை போக்கும் வகையில் தன்னார்வலர்கள் மூலம் பழங்குடியின மக்களை நேரில் தொடர்பு கொண்டு அவர்களுக்கு தடுப்பூசி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.” என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, உதகை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மனோகரி, இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.பழனிசாமி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி உட்பட செவிலியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்